In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 78/2023 | Prosecution witness P.W.11 |
| Name: Kalaiarasan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 23.03.2026.

**(Accused present.)**

முதல் விசாரணை :–

நான் தற்சமயம் திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 26.06.2022ம் தேதி விருவீடு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கன்னையன் மனைவி ராஜலட்சுமி என்பவர் காயத்துடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று அவர் காயத்துடன் இருந்ததால் மெடிக்கல் மெமோ கொடுத்து மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு பின்னர் புகாரை பரிசீலித்து நிலைய கு.எண்.136/2022 u/s 294(b), 324, 506(II) IPC and 3 of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை நிலக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்திற்கும் நகல்களை சம்மந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கு விசாரணைக்காக வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.5. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

அசா1 ராஜலட்சுமி புகாரை எழுதிக்கொண்டுவந்துதான் காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றால் சரிதான். புகாரை எழுதிக்கொண்டு

வந்தார்களா அல்லது காவல் நிலையத்தில் வைத்து எழுதினார்களா என்றால் காவல் நிலையத்தில் வைத்துத்தான் எழுதினார். காவல் நிலையத்திற்கு மதியம் 2 முதல் 2.30 மணிக்குள் ராஜலட்சுமி வந்தார். ராஜலட்சுமியுடன் யார் யார் வந்தார்கள் என்றால் Home Guard ஐச் சேர்ந்தவர்கள் 3 பேர் வந்தார்கள். அவர்கள் பெயர் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் புகாரைப்பெற்றவுடன் மருத்துவ நமூனா கொடுத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். மணி சரியாக ஞாபகமில்லை. பழனிச்சாமி SSI அன்றைய தினம் குடிபோதையில் வேனை ஓட்டிச்சென்று 2ம் எதிரி மற்றும் அவரது சகோதரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி SSI ஐ காவலர்கள் மணிமாறன், முருகன் ஆகியோர்கள் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றால் சரிதான். முதலில் ராஜலட்சுமி கொடுத்த புகாரின்பேரில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது அதன் பின்னர்தான் பழனிச்சாமி SSI க்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. பழனிச்சாமி SSI காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவரை அன்றைய தினமே மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நேரம் ஞாபகமில்லை. பழனிச்சாமி SSI இந்நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் நான் சம்பவ இடம் சென்றதாகவும் அங்கு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டுவிடும் என்பதாலும் பழனிச்சாமி SSI நான்தான் காவல் நிலையம் அழைத்துச்சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவரே ஈச்சர் வண்டியை ஓட்டிக்கொண்டு காவல்நிலையம் வந்துவிட்டார். பின்னர் நான் காவல்நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். ஈச்சர் வண்டியை காவல்நிலையத்திற்கு பழனிச்சாமி SSI தான் ஓட்டிவந்தார், வேறு யாரும் ஓட்டிவரவில்லை என்றால் சரிதான். காவலர் விவேக் அவரது சாட்சியத்தில் சம்பவ இடத்திலிருந்து ஈச்சர் வண்டியை நான் சொன்னதன்

பேரில் விவேக் காவல் நிலையத்திற்கு ஓட்டிவந்ததாக சொல்லியுள்ளார் என்றால் நான் அவரை ஓட்டிவரச்சொல்லவில்லை. 2 வது எதிரியும் அவரது சகோதரரும் ஈச்சர் வண்டி மோதியதில் கீழே விழுந்ததில் அவர்தகள் இருவரையும் ஆம்புலன்சில் ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பழனிச்சாமி SSI மீது விபத்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது அந்த வழக்கு நிலக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் எஸ்டிசி எண்.21/2023 ஆக நடந்து வருகிறது என்றால் சரிதான். உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு இண்டிமேசன் வந்தது. எத்தனை மணிக்கு வந்தது என்றால் ஞாபகமில்லை. மேற்படி வழக்கில் வழக்கு பதிவு செய்தது, விசாரணை மேற்கொண்டது எல்லாம் நான்தான் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கு.எண்.137/2022 வழக்கு சம்மந்தப்பட்ட புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் குவிமுச.161(3)ன் கீழான வாக்குமூலங்கள், குற்ற இறுதிஅறிக்கை அனைத்தும் நான் பதிவு செய்ததுதான். அவைகள் அடங்கிய கோப்பு எதசாஆ.3. உசிலம்பட்டி மருத்துவமனைக்கு நான் சென்று சிகிச்சையில் இருந்த பிரகாஷ் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு வாக்குமூலம் வாங்கினேன் என்பது ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் அன்றைய தினம் எத்தனை மணிவரை இருந்தேன் என்றால் காலையில் இருந்தேன். பின்னர் உசிலம்பட்டி மருத்துவமனை சென்றேன். எத்தனை மணிக்கு இண்டிமேசன் வந்தது, எத்தனை மணிக்கு உசிலம்பட்டி மருத்துவமனை சென்றேன் என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்லமுடியும். உசிலம்பட்டி மருத்துவமனையில் பிரகாசிடம் புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து அன்றைய தினம் 19.30 மணிக்கு வழக்கு பதிவு செய்துள்ளேன். எதிரிகள்

உசிலம்பட்டி மருத்துவமனையில் அன்றைய தினம் மாலை 4 மணிக்கே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும் நான் பழனிச்சாமி SSI க்காக ஆதரவாக செயல்பட்டு காலதாமதமாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த தவறும் செய்யவில்லை என்றும் பழனிச்சாமி SSI ஐ பணிநீக்கம் செய்யாமல் இருப்பதற்காக எதிரிகள் மீது போடப்பட்டு பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.23 13:36:41 +0530

Principal District Judge,
Dindigul.